# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
## முதலாம் தவணைப் பரீட்சை - 2015
## செயன்முறைத் தொழினுட்பம்

| தரம் :- 07 | சுட்டெண்:- .......................................... | நேரம்:- 1 மணி 30 நிமிடம் |
|---|---|---|

பகுதி - I

❖ பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01) பயிர்களில் இருந்து சிறப்பான அறுவடையைப் பெற மேற்கொள்ள வேண்டிய பின்கண்காணிப்பு நடவடிக்கைகளில் உள்ளடங்காதது
1) பசளையிடல் 2) ஆரம்பப் பண்படுத்தல்
3) நீர்ப்பாசனம் 4) பீடைக் கட்டுப்பாடு

02) கூட்டெரு தயாரிக்கத் தொடங்கி எத்தனை மாதத்தின் பின் கூட்டெருவாகப் பயன்படுத்தலாம்?
1) $2\frac{1}{2}$ மாதம் 2) 6 மாதம் 3) $1\frac{1}{2}$ மாதம் 4) 3 மாதம்

03) வெண்டி, மிளகாய் போன்ற பயிர்களில் இலைச் சித்திர வடிவ நோய்க்கான காரணி
1) பற்றீரியா 2) பங்கசு 3) வைரசு 4) வட்டப்புழு

04) பங்கசு நோய்த் தாக்கத்தை தடுக்கும் வழிவகையாக அமைவது
1) எதிர்ப்பினங்களைப் பயிரிடுதல்
2) போடோக் கலவை விசிறல்
3) நோயுற்ற தாவரத்தை பிடுங்கி அகற்றல்
4) தூய்மையாக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்

05) பயிர்ச்செய்கைக்கு உகந்த மண்
1) மணல்மண் 2) களிமண் 3) இருவாட்டி மண் 4) ஊரிமண்

06) சேதனப் பசளையை எவ்வாறான நேரத்தில் இட வேண்டும்?
1) பயிர்களை நாட்டிய பின் 2) பயிர்கள் பூத்து காய்க்கும் போது
3) அறுவடை செய்ய முன் 4) பயிர்களை நட முன்

07) உணவு சமைப்பதால் கிடைக்கும் நன்மையாக அமையாதது
1) உணவு இலகுவில் சமிபாடடையும் 2) உயிர்ச்சத்துக்கள் அழியும்
3) கிருமிகள் அழிந்து போகும் 4) உணவின் சுவை அதிகரிக்கும்

08) அதிகளவு புரதம் காணப்படும் உணவு வகை
1) தானியவகை 2) பருப்புவகை 3) இலைக்கறிவகை 4) கிழங்கு வகை

09) பாலில் அதிகளவில் உள்ள கனிப்பொருள்
1) இரும்பு 2) கல்சியம் 3) பொஸ்பரசு 4) கேசின்

10) சமைக்காது உணவுக்கு எடுத்துக் கொள்ளப்படும் இலை வகையைச் சுத்தம் செய்ய சிறந்த முறை

1) கழுவுதல்
2) உப்புநீரில் கழுவுதல்
3) சுடுநீரில் கழுவுதல்
4) கழுவாது சமைத்தல்

11) நீரில் ஊறவைத்து சமைக்கும் உணவு

1) அரிசி
2) கிழங்கு
3) கௌபீ
4) கீரை

12) ஒருவர் உட்கொள்ளும் உணவில் செல்வாக்குச் செலுத்தாத காரணி பின்வருவனவற்றுள் எது?

1) வயது
2) செய்யும் தொழில்
3) பருமன்
4) தேவைப்படும் போசணை

13) இயக்கத்தின் திசையை மாற்றுவதற்கு பயன்படுத்தும் பற் சில்லுகளின் எண்ணிக்கை யாது?

1) 01 பற்சில்லு
2) 02 பற்சில்லுகள்
3) 03 பற்சில்லுகள்
4) 04 பற்சில்லுகள்

14) முதலாம் வகை நெம்பு கோலுக்கு உதாரணம்

1) பாக்குவெட்டி
2) கத்தரிக்கோல்
3) தூண்டில்
4) சாவணம்

15) தடித்த கடதாசி, மென்பலகை போன்றவற்றை பொருத்தப் பயன்படுவது

1) கம்பியாணி
2) கொக்கி ஆணி
3) திருகாணி
4) மென்றகட்டாணி

16) உறுதியான பற்கள், எலும்புகள் உருவாக உதவுவது

1) கொழுப்பு
2) காபோவைதரேற்
3) கல்சியம்
4) புரதம்

17) கேத்திர கணித திண்ம உருவிற்கு உதாரணம்

1) சதுரம்
2) வட்டம்
3) சதுரமுகி
4) செவ்வகம்

18) இலவசப் பொருட்களில் ஒன்று

1) சூரியஒளி
2) குழாய் நீர்
3) புத்தகம்
4) பேனா

19) காபோவைதரேற் அதிகளவில் காணப்படும் உணவுகள்

1) பால், முட்டை
2) இறைச்சி, மீன்
3) கருவாடு, கீரை
4) கிழங்கு, அரிசி

20) துளையிட முன் அடையாளம் போட உதவும் கருவி

1) துறப்பணம்
2) மைய அமுக்கி
3) சிறைக்கவராயம்
4) உட்பக்க இடுக்குமானி

(1 × 20 = 20 புள்ளிகள்)

kalvi.lk

## பகுதி - II

❖ முதலாம் வினாவுக்கும் விரும்பிய வேறு இரண்டு வினாக்களுக்குமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.

01)

i) தவணை I இல் நீர் செய்த செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

ii) அவற்றில் ஒன்று செய்வதற்கு பயன்படுத்திய பொருட்கள், உபகரணங்களைக் குறிப்பிடுக.

iii) அச்செயற்பாட்டால் நீர் பெற்ற அனுபவங்களைத் தருக. (10 புள்ளி)

02)

i) கூட்டெரு தயாரிக்கும் முறையினைத் தருக.

ii) தாவர, விலங்குக் கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டெரு தயாரிப்பதில் கிடைக்கும் நன்மைகளைத் தருக.

iii) வேலித் தாவரங்களாக பயன்படுத்தக்கூடிய தாவரங்கள் 4 தருக. (10 புள்ளி)

03)

i) மண்ணரிப்பினால் ஏற்படும் பாதிப்புக்கள் 4 தருக.

ii) மண்ணரிப்பைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முறைகள் 3 தருக.

iii) வேலியடைப்பதனால் பெற்றுக் கொள்ளும் அனுகூலங்கள் 3 தருக. (10 புள்ளி)

04)

i) எமக்கு உணவு ஏன் அவசியமாகின்றது?

ii) உணவைத் தயாரிப்பதற்காக எவ்வாறு ஒருவர் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்?

iii) பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| உணவு வகை | பிரதான போசணைப் பொருட்கள் | பிரதான தொழிற்பாடு |
|---|---|---|
| a. தானியவகை | | |
| b. பருப்பு வகை | | |
| c. இலைக்கறிவகை | | |
| d. பாலும் பாற்பொருட்களும் | | |

(10 புள்ளி)

05)

i) நெம்புகோலின் வகைகளைத் தருக.

ii) இயங்கும் பொருள் ஒன்றின் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய முறைகள் 3 தருக.

iii) பல்வேறு வகையான ஆணிகள் பொருள் ஒன்றை உருவாக்கப் பயன்படுகின்றன. 4 வகையான ஆணிகளின் பெயர்களைத் தருக. (10 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL AND ENGLISH MEDIUMS

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

**GRADE 7**

**திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.**

FREE **ADMISSION**

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

**Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)**



**கல்வி**
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page